## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

PW –1

OS. No. 38/2017 C/W

OS.No.100/2017 & 98/2021

**பெயர்: ரத்தினசாமி**

**தேதி : 01.11.2021**

**(Time : 12.05 to 12.55)**

**1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் OS.No.100/2017 வழக்கில் வாதிகள் தரப்பிலும், மற்றும் OS.No.98/2021 வழக்கில் 5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை :**

அ.வ.எண்.38/2017 வழக்கானது சொத்து பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டது. அ.வ.எண்.98/2021 வழக்கானது சொத்து எனக்கு முழு உரிமையுள்ளது என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது. அ.வ.எண்.100/2017 வழக்கனாது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது தந்தையின் சொந்த ஊர் குப்பிச்சிபாளையம், எனது தாயாரின் சொந்த ஊர் முருகம்பாளையம், நான் பிறந்தது முருகம்பாளையத்தில் ஆகும். ஆரம்ப காலத்தில் எனது தகப்பனார் கதர் கடைக்கு வேலைக்கு சென்று வந்தார். எனது தந்தை 1979 ம் ஆண்டு சிவசண்முகம் பிளிர்ச்சர்ஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார். நான் 1961 ம் ஆண்டு பிறந்தேன். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 1990 ம் வருடம் திருமணம் நடந்தது. எனது தந்தைக்கு நான் மூத்த பையன் ஆவேன். திருமணத்திற்கு பிறகு நாங்கள் கூட்டுக்குடும்பமாகவே வசித்து வந்தோம். நான் 10 ஆண்டுகளில் தனி குடித்தனம் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 207 / 1A, 207/1B ஆகும். தாவா சொத்து 1 ஏக்கர் 50 செண்ட் சொத்தாகும். மேற்படி பூமி எனது தந்தையின் பெயரில் 25.05.1983 ம் ஆண்டு வாங்கப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும் போது கூட்டுக்குடும்பத்தில் எனது தகப்பனார் கிரையம் பெற்ற விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். எனது தககப்பனார் சுயமாக சம்பாத்தியம் செய்தது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சுயமாக சம்பாத்தியம் செய்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 05.08.2016 ம் தேதியில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி ஆவணம் ஆகும். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் தான் விபரங்கள் தெரிவித்தேன். பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை எனது தகப்பனார் மற்றும் இரண்டு பங்குதாரர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1999 ம் வருடம் வா.சா.ஆ.3 மூலமாக நான் மேற்படி நிறுவனத்தில் பங்குதாரராக சேர்ந்ததாக ஒரு ஆவணம் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரி. மேற்படி ஆவணம் பெயளரவில் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் ஆடிட்டரின் அறிவுரையின்படி ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. பிரின்ஸ் டையிங் நிறுவனமோ அதன் முகவரியோ ஏதாவது சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவசண்முகம் பிளிர்ச்சஸ்க்கு தொழில் சம்பந்தமாக வா.சா.ஆ.5 ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் இல்லை. ராஜேஸ்வரி பிளிசிங் பேக்டரியின் உரிமையாளர் என்ற இடத்தில் உரிமையாளர் பெயர் போடப்பட்டுள்ளதா என்றால் போடவில்லை. ராஜேஸ்வரி பிளிசிங் பேக்டரி என்பதும், பிரின்ஸ் டையர்ஸ் நிறுவனமும் வேறு வேறு நிறுவனம்ஆகும். பிரின்ஸ் டையர்ஸ் நிறுவனம் 1992ல் மூன்று நபர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1992ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட போது எனது தகப்பனார் தான் உரிமையாளர் என்று அரசு துறையில் அனுமதி பெற்றார் என்றால் சரி. எனது தகப்பனார் தொழில் நடைபெற்ற தேதி வரை உரிமையாளராக இருந்தார் என்றால் சரியல்ல. கோல்டு சன் எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் செல்லம் நகரில் 2003ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரி. எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.9, 10 ஆவணத்தில் உள்ள சொத்து எனது தனிப்பட்ட சொத்தாகும். மேற்படி ஆவணத்தை வைத்து கோல்டு சன் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்காக வாங்கப்பட்ட கடன் ஆகும். பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்காக வாங்கப்பட்ட கடன் அல்ல. பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்கு கழிவு நீரை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கட்டுவதற்கு கடன் வாங்கப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கடன் என்னுடைய நிறுவனத்திற்கு வாங்கப்பட்ட கடன் என்றால் சரியல்ல. அடமான கடன் பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு கடன் இருந்தது என்பது குறித்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. 8ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு 396 பங்கு சான்றிதழ் உள்ளது. அவை அனைத்தும் எனது தகப்பனாரின் பெயரில் உரிமையாளர் என்று தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பங்கு சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் நகல் தான் உள்ளது. பங்குதாரர் சான்றிதழ் எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். 2005ம் வருடம் சுத்துகரிப்பு நிலையத்திற்கு விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.16 ஆவணங்களில் உரிமையாளர் பெயரும், கூட்டாண்மை நிறுவனத்தின் பெயரும் குறிப்பிடவில்லை என்றால் சரி. 20,000 சதுரடிக்கு கட்டிடம் கட்டப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் கடன் வாங்கிய ஆவணங்கள் உள்ளது. 20,000 சதுரடியில் கட்டிடங்கள் கட்டப்பட்டது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மின் இணைப்பு எத்தனை HP என்றால் 50 HP ஆகும். வா.சா.ஆ.17 ஆவணத்தில் மின் இணைப்பு எண்.635 வீரபாண்டி சுற்றுவட்டாரத்திற்கு சம்பந்தப்பட்டது. வா.சா.ஆ.17 வரிசையில் முதல் ஆவணம் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது ஆகும். டையிங் நிறுவனம் நடந்து கொண்டிருக்கும் போது மின்சார கட்டணம் ரூ.10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வரும். மிஷின் ஓடவில்லை என்றால் 3000 அல்லது 4000 தான் வரும். 2011 ஜனவரியில் பிரின்ஸ் டையிங் நிறுவனம் ஓடுவதில்லை என்றால் சரி. 2012ம் வருடம் மறுபடியும் நிறுவனம் ஓட

ஆரம்பித்தது. 2012 மீண்டும் ஓட ஆரம்பித்தது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் ராமசாமி கவுண்டர் இறக்கும் போது பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் மிஷினெரிகளை விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி நிறுவனத்திற்கு சொத்து எதுவும் இல்லை என்றும் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 2011 வருடம் பிரின்ஸ் டையிங் நிறுவனம் நலிந்து போன நிறுவனம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2017 ல் வங்கியில் கடன் கட்டவில்லை என்று அறிவிப்பு அனுப்பியது என்றால் வந்தது. நான் ரூ.4 லட்சம் கடன் கட்டினேன். வங்கி கடனாக ரூ.4 லட்சம் கட்டினேன் என்பது பொய் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:-**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V BREZNEV Digitally signed by V BREZNEV
Date: 2021.11.01 17:46:52 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.